# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 145/2023

| | |
|---|---|
| | Prosecution PW 5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | முருகேசன் |
| Father's Name | : | வெள்ளையன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.09.2025

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளியணை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2020ம் தேதி பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் மு.நி. காவலராக பணிபுரிந்தபோது, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த நாராயணன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து பசுபதிபாளையம் காவல் நிலைய கு.எண்.569/2020, ச.பி. 294(பி),323,324,506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் நாகராஜன் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவ தினத்தன்று நான் பாராவில் இருந்தேன் என்றால் இல்லை. இன்டிமேஷன் அலுவலாக இருந்தேன். முதல் தகவல் அறிக்கை நான்தான் போட்டேன். சம்பவ தேதியில் நான் முதல் நிலைக் காவலர் என்றால் சரிதான். எனக்கு வழக்கு பதிவு செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றாலும், நான் அதை தவறாக பயன்படுத்தி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளின்மீது நான் பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**